திருப்பூரில் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்புகள்

* 64 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்பூர் நகரிலுள்ள தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் மேலும் 60 வீடுகள் கட்டும் திட்டம் துவக்கப்பட்டு விட்டதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை முடிவடையும் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) திருப்பூர் நகரில் உள்ள தொழிற்சாலையில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்காக ஏற்கனவே 60 சிறு வீடுகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினரால் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. மேலும் 108 சிறு வீடுகள் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் (Subsidised Industrial Housing Scheme) கட்டுவதற்கான திட்டம் ஒன்று ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசு இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தவுடன் தமிழ்நாடு அரசு வீட்டு வசதி வாரியம் ஒரு ஆண்டிற்குள் இத் திட்டத்தைப் பூர்த்தி செய்துவிடும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, திருப்பூர் நகரில் ஏறத்தாழ 10 ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 60 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டதாகவும், மேலும் 108 வீடுகள் கட்ட ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாகவும் சொன்னார்கள். மேற்கொண்டு 700 வீடுகள் கட்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தற்போது திட்டத்தில் இருக்கிற 108 வீடுகளுக்கான உத்தரவு பெற்ற பிறகு அடுத்தாற்போல் மேலும் வீடுகளைக் கட்ட உத்தரவைப் பெற முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Water Supply for Madhavaram Milk Project

* 80 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the steps taken to secure protected water supply at Madhavaram Milk Project?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாதவரம் பால் திட்டத்திற்குத் தேவையான நீர், பண்ணையில் உள்ள கிணறுகளிலிருந்தும், பஞ்செட்டியிலுள்ள துளைக்கிணறுகளிலிருந்தும் வழங்கப்படுகின்றது. இப்பண்ணையில் இந்த நீரில் குளோரின் மருந்து சேர்க்கப்படுகிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இந்தப் பால் பண்ணையில் பால் பாட்டில்கள் சரியாகக் கழுவப்படாத காரணத்தால் பால் திரிந்து போவதாக அரசிடம் குறைகள் ஏதாவது கூறப்பட்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட குறைகள் ஏதும் இப்போது இல்லை.